உயர் இடைநிலை வகுப்புகள்

*வினா எண். 283—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Higher Secondary Education வகுப்புகளை எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் அரசு துவங்க இருக்கிறது?

(ஆ) அந்த வகுப்புகளுக்குப் பாடம் நடத்த அமர்த்தப் படும் ஆசிரியர்களின் அடிப்படைத் தகுதிகளை அரசு நிர்ணயம் செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 912 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். பொதுக் கல்வி (Academic Course) மற்றும் தொழில் சார்புக் கல்வி (Vocational Course) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வேண்டிய கல்வித்தகுதிகளை நிர்ணயம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

*வினா எண். 284—திரு.என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் நடப்பு கல்வி ஆண்டில் எத்தனை உயர் செகண்டரி பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன ?

(ஆ) அவைகளில் ஆங்கில போதனா மொழி வகுப்புகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 912.

(ஆ) அவற்றுள் 418 பள்ளிகளில் 584 ஆங்கில போதனா மொழி வகுப்புகள் உள்ளன.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் வகுப்பிலே பட்டம் பெற்று, பயிற்சி பெற்று, ஏறத்தாழ 20 ஆண்டுகளாக அனுபவம் உள்ள தமிழ் ஆசிரியர்களை அந்த

[திரு. கோ இளங்கோவன்] [1979 மார்ச் 8

வகுப்புகளை எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அதைப்பற்றி இந்த அரசினுடைய கருத்து என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களைவிட தகுதியானவர்கள் இருக்கின்ற காரணத்தாலே, அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. இப்போது அந்தத் தமிழாசிரியர்கள் வற்புறுத்தி வருகிற காரணத்தாலே, நாங்கள் அதைப் பரிசீலிக்கிறோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த மேல்நிலைப் பள்ளிகளிலே அரசுப் பள்ளிகள் எத்தனை? தனியார் பள்ளிகள் எத்தனை? என்பதையும், எந்தெந்தப் பாடங்கள் ஆங்கிலத்திலே பயிற்றுவிக்கப்படுகின்றன என்பதையும், அவ்வாறு ஆங்கிலத்திலே பயிற்சி அளிக்கவேண்டிய தன் அவசியம் என்ன என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்ட பள்ளிகளின் எண்ணிக்கை 418. மொத்தப் பள்ளிகள் 916. இவற்றில் 870 உயர்நிலைப் பள்ளிகள்; 24 ஆங்கிலோ—இந்தியன் பள்ளிகள்; 18 மெட்ரிகுலேஷன் பள்ளிகள்; மொத்தம் 912 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அரசுப் பள்ளிகள் எத்தனை என்ற தனியான விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும். ஆங்கில போதனா மொழி வகுப்புகள் என்பது பெற்றோர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, கல்வித் துறை, கல்வி முறை என்கின்ற அடிப்படையில் இதை நாம் ஏற்க வில்லை; அரசின் கொள்கையும் அல்ல. இந்த அரசு மட்டுமல்ல; இந்திய அரசும், இதற்கு முன்பிருந்த மாநில அரசும் அந்தக் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. தாய்மொழி மூலமாக கல்வி தரவேண்டுமென்ற கொள்கையை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் நம்மிடையே இருக்கும் குழப்பம்தான். மொழித் திறன் வேறு; அறிவு வளர்ச்சி வேறு. இன்றைய தினம் கூட நாம் தாய்மொழியில் கல்வியைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டால், வெகு விரைவில் சிறந்த அறிஞர்களை, ஆற்றல் மிக்கவர்களை நம்மாலே உருவாக்க முடியும். இல்லையென்றால், ஆங்கில மொழியை கற்பிப்பதன் மூலம் ஆங்கில மொழி அடிமைகளை அல்லது பிற நாட்டைச் சேர்ந்த குடிமக்களை நம்மாலே உருவாக்க முடியுமே தவிர, சுதந்திரமாக சிந்திக்கக்கூடியவர்களை நிச்சயமாக நம்மாலே உருவாக்க முடியாது. எனவே, மொழித் திறன் என்பது வேறு அறிவு வளர்ச்சி வேறு.

1979 மார்ச் 8]

[முற்பகல் 9–40]

திரு. மா. மணிமாறன்: தொடங்கப்பட்டிருக்கின்ற மேல் நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் இன்னும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாத பள்ளிகள் இருக்கின்றன. அதனால் பாடங்கள் நடத்தப்படாமல் இருக்கிறது. தேர்வு நெருங்கிக் கொண்டி ருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளைப் பொறுத்து அரசு என்ன முடிவு எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பல்வேறு நிர்வாகக் காரணங்களால் இந்தத் தவறுகள் நடைபெற்றிருக்கலாம். அவை களைப் போக்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

திரு. போ. கோபாலன்: மேல்நிலைப் பள்ளிகளில் ஆங் கிலத்தில் எம்.ஏ. படித்தவர்கள் வேலைக்கு அனுமதிக்கப்பட்டி ருக்கிறார்கள். தமிழில் எம்.ஏ. படித்தவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. ஏற்கனவே உள்ள தமிழாசிரியர்கள் தனி யாகப் படித்துவிடுகிற காரணத்தால் அவர்களுக்கு ப்ரொமோ ஷன் என்ற நிலையில் அவர்களை அந்தப் பதவிகளில் போடு கிற காரணத்தால் தமிழில் எம்.ஏ. படித்த இளைஞர்களுக்கு எந்த விதமான வாய்ப்பும் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கி றது. பதவி உயர்வு பெறுவதன் மூலம் காலியாகும் தமி ழாசிரியர்கள் பதவிகளிலாவது இவ்வாறு எம்.ஏ. படித்துவிட்டு வேலை இல்லாது இருக்கின்ற இளைஞர்கள் அனுமதிக்கப்படு வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்களை நிய மிக்கின்றபோது தமிழ் ஆங்கிலம் என்று பார்ப்பதில்லை. ஏற் கனவே உள்ள தமிழாசிரியர்கள் பதவி உயர்வு பெறுவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படி பதவி உயர்வு தரப்படுகிறது. ஆசிரியர்கள் இல்லையென்றால் வெளியே இருந்து போடுகிறோம். தமிழில் எம்.ஏ. படித்த இளைஞர் கள் தற்போது இந்தப் பணி கூட கிடைக்காமல் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி: ஆசிரியர்களின் தகுதியைப் பற்றிக் கேள்வி யில் எழுப்பப்பட்டு அமைச்சர் அவர்கள் சில பதில்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுடைய தகுதியைக் காட்டுவதற்கே வழி இல்லாத முறையில் ஹையர் செகண்டரி பள்ளிகளில் விஞ்ஞானக் கருவிகள், ஆராய்ச்சிக் கூடங்கள் இல் லாததால் வேறு வேறு பள்ளிகளுக்கு மாணவர்கள் சென்று வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதைத் தடுக்க குறிப் பிட்ட காலத்திற்குள் அங்கெல்லாம் இந்த ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

[1979 மார்ச் 8

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்படிப்பட்ட சிரமங்கள் எலலாம் எதிர்பார்க்கப்பட்டதுதான். அவற்றைப் போக்குவதற்காகத்தான் எல்லா அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆய்வகங்கள் கட்டும் முயற்சி மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜூன் மாதத்திற்குள் முடிந்துவிடும். மாநகராட்சி, நகராட்சி பள்ளிகளைப் பொறுத்தவரை அந்த நிர்வாகங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறது. தனியார் பள்ளிகளுக்கு இதற்காக மாச்சிங் கிராண்ட் கொடுக்கும் திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. இந்தக் குறைகள் எதிர்பார்க்கப் பட்டதுதான். தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தீரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: ஒவ்வொரு பாட வகுப்புகளுக்கும் அந்தந்தப் பாடங்களில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் நடப்பு ஆண்டில் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அதேபோன்று பாடப் புத்தகங்களும் ஹையர் செகண்டரி வகுப்புகளுக்கு குறித்த காலத்தில் கிடைக்கவில்லை. ஆகவே, இனியாவது பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவும், பாடப்புத்தகங்கள் காலாகாலத்தில் கிடைக்கவும் வழி வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: குறிப்பிட்ட பாடங்களில் பயிற்சி பெற்றவர்களை நியமிப்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பாடப்புத்தகங்களைப் பொறுத்தமட்டில் கடந்த கால அனுபவங்களைக் கொண்டு தவறுகள் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: ஹையர் செகண்டரி பள்ளிகளில் லாபாரடரி எக்விப்மெண்ட்ஸ் இல்லாததால் சயன்ஸ் வகுப்புகளுக்கு பிராக்டிகல் வகுப்புகள் சரியாக நடத்தவில்லை என்று கூறப்படுகிறது. முன்பு பி.யு.சி. வரை இங்கிலீஷ் மீடியமாக இருந்தாலும் ஃபிரி எஜுகேஷன் கொடுக்கப்பட்டு வந்தது. அதே போல ஹையர் செகண்டரி படிப்பு வரை எல்லோருக்கும் ஃபிரி எஜுகேஷன் திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசினுடைய கொள்கை தாய்மொழி மூலம் பயிற்சி தருவதுதான். அதை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இலவசக் கல்வியை மக்கள் வரிப் பணத்திலிருந்து தர முடியும். ஆங்கிலத்தின் மூலமோ, லத்தீனிலோ, மற்ற மொழிகளிலோ படித்தால் அந்தப் பொறுப்பு அவரவர்களைச் சார்ந்தது.

1979 மார்ச் 8]

திரு. என். கிட்டப்பா : உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக் ஆக்கப்படும்போது ஏற்கனவே உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக இருந்தவர்கள் மேல் நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக வரக்கூடிய தகுதி யின்மை காரணமாக அந்த நிலையில் இருந்து அவர்கள் நீக்கப் படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாக இருந்தபோது வழங்கப்பட்ட சம்பளத் தொகை வழங்கப்படுகிறதா அல்லது அதைவிடக் குறைத்து வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே தலைமையாசிரியர்களாக இருந்து, மேல் நிலைப் பள்ளிகளிலே தலைமையாசிரியர்களாக வராதவர்கள், வேறு உயர்நிலைப்பள்ளிகளிலே தலைமையாசிரியர்களாக இருப்பார்கள், அரசுப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, இவ்வாண்டு மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை என்ன? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல், பாடப் புத்தகங்கள் காலதாமதமாகக் கிடைத்திருக்கிற காரணத்தினாலும், ஆசிரியர்கள் சரியாக நியமிக்கப் படாத காரணத்தாலும் தேர்வுகளில் அவர்களை வடிகட்டி விடாது மேல் வகுப்புகளுக்கு அனுப்புகின்ற ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, முழுத் தகவலும் என்னிடத்திலே தற்போது இல்லை, தோராயமாகச் சொல்கிறேன், 1 லட்சத்து 15 ஆயிரம் மாணவர்கள் புதிய 11-வது வகுப்பிலே சேர்ந்திருக்கிறார்கள். மாவட்ட அளவிலே தேர்வுகள் நடத்துமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்வுகளின் மூலமாகத்தான் தேர்ச்சியை நாம் கணிக்க இயலும்.

விழுப்புரம் பேருந்து நிலையம்.

*வினா எண் 285— திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் பேருந்து நிலையத்தை நவீன முறையில் மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.